දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. ........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය" බත්තරමුල්ල.
"இசுருபாயா" பத்தரமுல்ல.
"Isurupaya" Battaramulla.
මගේ අංකය / எமது இல. / My No. ED/04/60/01/15/V(I)
දිනය / திகதி / Date 2017.01.30

மொழிபெயர்ப்புப் பிரதி

கல்வி அமைச்சு சுற்றறிக்கை இலக்கம்: 7/2017

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலய கல்விப் பணிப்பாளர்கள்,

**இலங்கை அதிபர் சேவையின் அதிபர்கள் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரியர்களிடையே சம்பள ஏற்ற பொருத்தக் கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொண்டிருக்கின்ற உத்தியோகத்தர்களது சம்பளத்தை அ.நி.சு/ 03/2016 பிரகாரம் மாற்றம் செய்ய வேண்டிய விதம்**

2005.12.31 ஆம் திகதிக்கு சம்பள ஏற்றத்தின் பெறுமதி குறைவதை தவிர்ப்பதற்காக அரச நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் 19(இ) அத்தியாயத்தின் பிரகாரம் சீராக்கல் படியொன்றைப் பெற்றுக்கொண்டிருந்த இலங்கை அதிபர்சேவையினதும் இலங்கை ஆசிரியர் சேவையினதும் உத்தியோகத்தர்களது அந்த சம்பள ஏற்றசீராக்கல் படியை 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் வழங்க வேண்டிய விதத்தை விளக்குகின்ற 2016.02.25 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் 4.3 வகுதியின் பால் கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அரச நிர்வாக சுற்றறிக்கை 31/2011 மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கை 18/2012 இன் கீழ் வழங்கப்பட்ட விஷேட கொடுப்பனவைக் கணக்கிடும் போது மேலுள்ளவாறு வழங்கப்பட்ட சம்பள ஏற்ற சீராக்கல் படியையும் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே விஷேட கொடுப்பனவின் அந்தப் பகுதியும்அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் உப ஆவணம் 11இல் குறிப்பிடப்பட்ட அடிப்படைச் சம்பளம் மற்றும் அங்கு குறிப்பிட்ட பொருத்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக வழங்குதல் வேண்டும். மேலதிகமாக வழங்க வேண்டிய அந்தக் கொடுப்பனவை வழங்க வேண்டியது ஆவணம் 11இல் குறிப்பிடப்பட்ட சீராக்கல் படி உரித்தாகின்ற திகதி வரை மாத்திரமாகும்.

உதாரணம் - 2015.12.13ஆம் திகதிக்கு GE-2-2006 சம்பள அளவுத்திட்டத்தில் ரூ.34,005/= சம்பள நிலையும் ரூ.840/= சீராக்கல் படியையும் பெற்றுக்கொண்டிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்க வேண்டியது பின்வருமாறு ஆகும்.

(அ) 2015.12.31 திகதிக்குப் பெற்ற சம்பளமும் கொடுப்பனவும்

| | |
|---|---|
| அடிப்படைச் சம்பளம் | ரூ. 34,005 |
| விஷேட கொடுப்பனவு (20%) | ரூ. 6801 (அடிப்படைச் சம்பளத்தில் 20%) |
| சீராக்கல் படியின் மொத்தம் | ரூ. 840 |
| விஷேட கொடுப்பனவு (20%) | ரூ. 168 (பொருத்தக் கொடுப்பனவின் 20%) |
| மேலதிக இடைக்காலப் படி | ரூ. 10,000 |
| மொத்தம் | ரூ. 51,814 |

(ஆ) 2016.01.01 திகதி தொடக்கம் வழங்க வேண்டிய சம்பளமும் கொடுப்பனவும்0

| | |
|---|---|
| அடிப்படைச் சம்பளம் | ரூ. 41,267 |
| சம்பளத்தின் பொருத்தக் கொடுப்பனவு | ரூ. 9,539 |
| சம்பள ஏற்ற பொருத்தக்கொடுப்பனவின் மொத்தம் | ரூ. 840 |
| விஷேட கொடுப்பனவு (20%) | ரூ. 168 |
| மொத்தம் | ரூ. 51,814 |

(இ) 2017.01.01 திகதி தொடக்கம் வழங்க வேண்டிய சம்பளமும் கொடுப்பனவும் (சம்பள ஏற்றம் பெற்றுக்கொண்டிருந்தால்)

| | |
|---|---|
| அடிப்படைச் சம்பளம் | ரூ. 49,450 |
| சம்பளத்தின் பொருத்தக் கொடுப்பனவு | ரூ. 2,130 |
| சம்பள ஏற்ற பொருத்தக்கொடுப்பனவின் மொத்தம் | ரூ. 840 |
| விஷேட கொடுப்பனவு (20%) | ரூ. 168 |
| மொத்தம் | ரூ. 52,588 |

(ஈ) 2018.01.01 திகதி தொடக்கம் வழங்க வேண்டிய சம்பளமும் கொடுப்பனவும் (சம்பள ஏற்றம் பெற்றுக்கொண்டிருந்தால்)

| | |
|---|---|
| அடிப்படைச் சம்பளம் | ரூ. 57,950 |
| சம்பள ஏற்ற பொருத்தக்கொடுப்பனவின் மொத்தம் | ரூ. 840 |
| மொத்தம் | ரூ. 58,749 |

2018.01.01 திகதி தொடக்கம் அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக பொருத்தக் கொடுப்பனவொன்று உரித்தில்லை என்பதால் சம்பள ஏற்ற பொருத்தக் கொடுப்பனவின் அடிப்படையில் கணக்கிட்டு வழங்கப்பட்ட 20% விஷேட கொடுப்பனவும் அத்தினத்திலிருந்து வழங்கப்பட மாட்டாது.

03.இலங்கை ஆசிரியர் சேவையில் இருந்து இலங்கை அதிபர் சேவைக்கு நியமனம் பெறுவதன் அடிப்படையில் சம்பள ஏற்றத்தின் பெறுமதி குறைகின்ற சந்தர்ப்பமொன்றில் செயற்படுத்த வேண்டிய விதம் தொடர்பாக இலக்கம் 3/2014 சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2015.12.31 ஆம் திகதிக்குசம்பள ஏற்ற பொருத்தக் கொடுப்பனவொன்று உரித்துடைய உத்தியோகத்தர் ஒருவருக்காக அரச நிர்வாக சுற்றறிக்கை 31/2011 மற்றும் 18/2012 இன் கீழ் அந்த பொருத்தக் கொடுப்பனவுக்கு உரித்தான விஷேட கொடுப்பனவையும் மேலுள்ளவாறு கணக்கிட்டு வழங்குதல் வேண்டும். இந்தக் கொடுப்பனவையும் அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட பொருத்தக் கொடுப்பனவு உரித்தாகும் திகதி வரையில் மாத்திரமே வழங்குதல் வேண்டும்.

04. தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவினதும் தாபனப் பணிப்பாளர் நாயகத்தினதும் இணக்கப்பாட்டுடன் இச்சுற்று நிருபம் வெளியிடப்படுகின்றது.

சுனில் ஹெட்டியாராச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு